**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி : 02.08.2026 – ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

***தலைப்புச் செய்திகள்***

குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, 3 நாள் பயணமாக நாளை ஒடிசா செல்கிறார்.

நாட்டின் இளைஞர்கள் உடல் தகுதியுடனும், மன வலிமையுடனும் இருக்க வேண்டும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.

ஜவுளி அமைச்சகம், வரும் 5ஆம் தேதி, **துணிக்குள் உலகங்கள் – நெசவு முறையின் புதிய ஒழுங்குகள்** என்ற கண்காட்சியை புதுடெல்லியில் துவங்க உள்ளது.

2047ஆம் ஆண்டிற்குள் ஆரோக்கியமான மற்றும் போதைப்பொருள் பழக்கமற்ற இளம் தலைமுறையினரை உருவாக்குவதே பிரதமரின் தொலைநோக்குப் பார்வை என்று, புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் கூறியுள்ளார்.

***குடியரசு தலைவர் – ஒடிசா (10)***

குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, 3 நாள் பயணமாக நாளை ஒடிசா செல்கிறார். இப்பயணத்தின் போது, கஞ்சம் மாவட்டத்தில் உள்ள கட்டாக், புவனேஷ்வர், பிரம்மபூர் மற்றும் தப்தபானி ஆகிய இடங்களில் நடைபெற உள்ள கல்வி, கலாச்சார மற்றும் அலுவல் ரீதியான நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்க உள்ளார். நாளை கட்டாக்கில் உள்ள ஜகத்குரு கிருபாலு பல்கலைக் கழகத்தை திருமதி. திரவுபதி முர்மு திறந்து வைக்க உள்ளார். வரும் 4ஆம் தேதி, தப்தபானி அருகே உள்ள மா கந்துனி தேவி கோவிலில், தரிசனம் செய்கிறார். குடியரசுத் தலைவரின் இந்தப் பயணத்தின் போது விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. புவனேஷ்வர் மற்றும் கட்டாக்கில், சுமார் 40 காவல் படைப்பிரிவுகள் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

*மோடி -1 (16)*

நாட்டின் இளைஞர்கள் உடல் தகுதியுடனும், மன வலிமையுடனும் தன்னம்பிக்கை நிறைந்தவர்களாகவும் இருக்க வேண்டும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். புதுடெல்லியில் இன்று, காணொளி காட்சி மூலம் நடைபெற்ற **விக்சித் பாரத் சங்கல்ப் அபியான்** திட்டத்திற்கான **போதை முக்த் யுவத்தின்** தொடக்க விழாவில் பேசிய அவர், இளைஞர்கள் எப்போதும், போதைப் பொருட்களில் இருந்து விலகி, ஆரோக்கியமான வாழ்க்கை முறையை கடைபிடிக்க வேண்டும் என்று கூறினார். போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிரான, 100 வாரகால நாடு தழுவிய **ஜன் பாகிதாரி** பிரச்சாரத்தின் மூலம் போதைப் பொருள் இல்லாத சமுதாயத்தை உருவாக்க விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பொதுமக்களின் பங்கேற்பை ஊக்குவிக்கவும், நாடு முழுவதும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும், வாராந்திர நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். போதைப்பொருள் பழக்கம் இளைஞர்களை இலக்குகளில் இருந்து திசை திருப்பி, குடும்பங்களை அழிப்பது மட்டுமல்லாமல் தேசத்தின் வலிமையையும், பலவீனப் படுத்துகிறது என்றும், பிரதமர் குறிப்பிட்டார். இது குறித்து கூடுதல் தகவல்கள்…

*மோடி -2 (19)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இளைஞர்கள் போதைப்பொருள் பழக்கத்தில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் மற்றும் மற்றும் அதன் பின் விளைவுகளை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் என்றும் கேட்டுக் கொண்டார். இளைஞர்களின் போதைப் பொருள் பழக்கத்தால், பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்கள் சரியான நேரத்தில் நிபுணர்களை கலந்தாலோசிக்க வேண்டும் என்றும், ஆரம்ப நிலையிலேயே எச்சரிக்கை அறிகுறிகளைக் கண்டறிந்து, குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு இளைஞர்களுக்கு ஆதரவளித்து குடும்ப உறுப்பினர்கள் வெளிப்படையான உரையாடல் கலாச்சாரத்தை வளர்க்க வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார். சமூகத் தனிமை, வழக்கத்திற்கு மாறான நடத்தை, உரையாடல்களைத் தவிர்த்தல், இரவு நேரங்களில் வெளியே தங்குதல், அடிக்கடி பணம் கேட்டல் போன்ற குறிப்பிடத்தக்க மாற்றங்கள் போதைப் பொருள் பழக்கத்தின் ஆரம்ப அறிகுறிகளாக இருக்கலாம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி, கூறினார். மேலும், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்கள் போதைப்பொருள் பழக்கத்தின் அபாயங்கள் குறித்து மாணவர்களுடன் விவாதித்து, விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டும் என்று

என்று பிரதமர் வேண்டுகோள் விடுத்தார். நாடு முழுவதும் 28 ஆயிரம் இடங்களில் இருந்து, ஒரு கோடிக்கும் அதிகமான இளைஞர்கள் இந்நிகழ்ச்சியில் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

*முர்மு (8)*

குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, இன்று காலை குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற நாட்டு மக்கள் மற்றும் பாதுகாப்பு வீரர்கள் இடையே பிணைப்பை வலுப்படுத்தும் ராணுவ ஓட்டத்தை கொடியசைத்து தொடக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மிசோரம் ஆளுநர் ஜெனரல் வி.கே. சிங்-கும் பங்கேற்றார். குடியரசுத் தலைவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், **வீரர்களுக்காக ஓடுங்கள் – வீரர்களுடன் ஓடுங்கள்** என்ற தொலைநோக்குப் பார்வையின் கீழ், பொதுமக்களுக்கும், ஆயுதப் படைகளுக்கும் இடையிலான பிணைப்பை வலுப்படுத்த இந்த ஓட்டம் ஒரு தனித்துவமான தளமாக செயல்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

*NCC (15)*

நாட்டின் 79ஆவது ஆண்டு சுதந்திரத்தை நினைவு கூறும் வகையில், NCC எனும், தேசிய மாணவர் படை இன்று புதுடெல்லியில், சைக்கிளோத்தான் 2026-ஐ ஏற்பாடு செய்தது. பாதுகாப்புத் துறை இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத் முன்னிலையில், மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, இந்த சைக்கிளோத்தானை கொடியசைத்து தொடக்கி வைத்தார். மேஜர் தியான்சந்த் தேசிய மைதானத்தில், தொடங்கிய இந்த சைக்கிள் பேரணி, தேசிய தலைநகரின் முக்கிய இடங்கள் வழியாக பயணித்து, அதே மைதானத்தில் நிறைவடைந்தது. **தூய்மையான இந்தியா – பசுமையான இந்தியா - ஆரோக்கியமான இந்தியா** என்ற கருப்பொருளின் கீழ், இந்தப் பேரணி நடைபெற்றது. NCC-யின் அடித்தளமாக விளங்கும் தேசபக்தி, ஒழுக்கம், ஒற்றுமை மற்றும் அடிப்படை விழுமியங்களை வலுப்படுத்துவதோடு, உடற்தகுதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மற்றும், வாழ்வியல் நெறிமுறைகள் ஆகியவற்றை இளைஞர்களுக்கு ஊக்குவிப்பதே இந்தப் பேரணியின் நோக்கமாகும்.

***ஜவுளி கண்காட்சி -1 (3)***

ஜவுளி அமைச்சகம், வரும் 5ஆம் தேதி, **துணிக்குள் உலகங்கள் – நெசவு முறையின் புதிய ஒழுங்குகள்** என்ற கண்காட்சியை புதுடெல்லியில் துவங்க உள்ளது. இது குறித்த கூடுதல் விவரங்கள் ...

***ஜவுளி கண்காட்சி - 2 (10)***

வரும் 7ஆம் தேதி கொண்டாடப்படும் 12ஆவது தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு நடைபெறும் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இந்த கண்காட்சி வரும் 6ஆம் தேதி முதல் 19ஆம் தேதி வரை, காலை 11 மணி முதல் மாலை 6 மணி வரை, பொதுமக்களின் பார்வைக்காக திறந்திருக்கும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. இக்கண்காட்சியில், தற்கால ஜவுளி கலைஞர்கள், வடிவமைப்பாளர்கள் மற்றும் கைவினைக் குழுக்களை ஒன்றிணைக்கும் ஒரு சிறந்த தளமாக விளங்கும் என்று, அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும், ஆய்வு சார்ந்த படைப்புகள், கலைஞர் மற்றும் கைவினைஞர் கூட்டுப் பணிகள் மற்றும் ஜவுளி தயாரிப்பின் சமூக வரலாற்று மற்றும் கலாச்சார சூழல்களை இந்த கண்காட்சி எடுத்துக் காட்டும் வகையில் அமையும் என்று, அமைச்சகம் கூறியுள்ளது.

***தேசிய கொடி (11)***

இந்திய தேசிய கொடியை வடிவைமைத்த Pingali Venkayya-வின் 150ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப் படுகிறது. இந்நாளை ஒட்டி, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், சுதந்திரப் போராட்ட வீர ரும், காந்தியவாதியுமான பிங்கலி வெங்கய்யா நாட்டின் வரலாற்றில் முக்கிய இடம் பிடித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், பிங்கலி வெங்கய்யா வடிவமைத்த தேசிய கொடி நாட்டின் பெருமையை பறைச்சாற்றுவதாக தெரிவித்துள்ளார். ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், பிங்கலி வெங்கய்யா வடிவமைத்த தேசிய கொடி மூலம் மக்களுக்கு தேசப் பற்றை ஊட்டியதாக கூறியுள்ளார்.

***புதுச்சேரி (19)***

2047ஆம் ஆண்டிற்குள் விழிப்புணர்வு உள்ள பாரதம் என்ற தொலைநோக்குப் பார்வையை அடைய, ஆரோக்கியமான மற்றும் போதைப்பொருள் பழக்கமற்ற இளம் தலைமுறையினர் மூலமே, சாத்தியம் என்று புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் கூறியுள்ளார். கூறியுள்ளார். புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் இன்று நடைபெற்ற, போதைப்பொருள் அற்ற பாரத இயக்கத்தில் உரையாற்றிய அவர், இந்த இயக்கம் வெறும் அரசின் முயற்சி மட்டுமல்ல, நாட்டின் இளைஞர்கள் போதைப்பொருள் எனும் தீங்கில் இருந்து பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு மக்கள் இயக்கம் என்று கூறினார். தொடர்ந்து பேசிய அவர், மாணவர்கள் போதைப் பொருட்களில் இருந்து விலகி, சக மாணவர்களிடையே

மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் இந்த இயக்கத்தின் தூதுவர்களாக மாற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, போதைப்பொருள் அற்ற பாரத இயக்கத்தை காணொளி வாயிலாக தொடங்கி தொடங்கி வைத்த நிகழ்ச்சி, நேரலையாக ஒளிபரப்பப் பட்டது. மாணவர்கள் மற்றும் பங்கேற்பாளர்களுக்கு போதைப் பொருள் இல்லா இந்தியாவிற்கான இந்தியாவிற்கான உறுதி மொழியை துணைநிலை ஆளுநர் வாசித்தார். நிகழ்ச்சியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, புதுச்சேரி பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு, தலைமைச் செயலாளர் டாக்டர் சரத் சவுகான், மை பாரத் திட்ட மாநில துணை இயக்குநர் இயக்குநர் திரு. திரவீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

***நீட் (5)***

முதுகலை மருத்துவ படிப்புகளான நீட் நுழைவுத் தேர்வு ஏற்பாடுகளை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. J.P. நட்டா ஆய்வு செய்தார். வரும் 30ஆம் தேதி நடைபெற உள்ள இந்த நுழைவுத் தேர்வு நேர்மையாகவும், வெளிப்படைத் தன்மையுடனும், பாதுகாப்பாகவும் நடத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

***விளையாட்டு (16)***

கிளாஸ்கோ காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் இன்றுடன் நிறைவடைகிறது. நிறைவு நாளான இன்று, சைக்கிளிங், ஜூடோ போட்டிகளில் இந்திய வீரர்கள் களம் காண்கின்றனர். 74 நாடுகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 729 வீரர் வீராங்கனைகள்பங்கேற்ற இப்போட்டிகளில் இந்தியா இதுவரை 13 தங்கம், 17 வெள்ளி, மற்றும் 9 வெண்கலம் என மொத்தம் 39 பதக்கங்களுடன் பதக்கப்பட்டியில், 4ஆவத இடத்திற்கு முன்னேறி உள்ளது. பாரா விளையாட்டுப் போட்டிகளில் 3 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கம் வென்று இந்திய வீரர்கள் சாதனை படைத்துள்ளனர். 2030 ஆண்டு நடைபெற உள்ள 24ஆவது காமன்வெல்த் போட்டிகள் அகமதாபாத்தில் நடைபெற உள்ளதை அடுத்து, காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிக்கான கொடி முறைப்படி இந்தியாவிடம் ஒப்படைக்கப்படும்.

*வானிலை (18)*

வட கர்நாடகத்தில் இருந்து குமரிக்கடல் பகுதிகள் வரை, கேரளம் மற்றும் தமிழகம் வழியாக ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி நிலவுவதால், மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் வட கடலோர தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளத்தில் இடுக்கி, கோட்டயம், மலப்புரம் உள்ளிட்ட 12 மாவட்டங்களில் தொடர்ந்து, கனமழை பெய்து வருகிறது. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் இருந்து, ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப் பட்டுள்ளனர். 65 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு, நூற்றுக் கணக்கானோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அம்மாநிலத்தில் கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் நீரில் மூழ்கி 8 பேர் உயிரிழந்துள்ளனர். ஏராளமான வீடுகள் சேதமடைந்துள்ளன. கரையோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

ஒடிசாவில் தொடர்மழை காரணமாக, பல்வேறு பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. மகாநதி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளதை அடுத்து, கட்டாக், பூரி உள்ளிட்ட மாவட்டங்களில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, 3 நாள் பயணமாக நாளை ஒடிசா செல்கிறார்.

நாட்டின் இளைஞர்கள் உடல் தகுதியுடனும், மன வலிமையுடனும் இருக்க வேண்டும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.

ஜவுளி அமைச்சகம், வரும் 5ஆம் தேதி, **துணிக்குள் உலகங்கள் – நெசவு முறையின் புதிய ஒழுங்குகள்** என்ற கண்காட்சியை புதுடெல்லியில் துவங்க உள்ளது.

2047ஆம் ஆண்டிற்குள் ஆரோக்கியமான மற்றும் போதைப்பொருள் பழக்கமற்ற இளம் தலைமுறையினரை உருவாக்குவதே பிரதமரின் தொலைநோக்குப் பார்வை என்று, புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் கூறியுள்ளார்.